தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

ஆண்டறிக்கை 2021

உள்ளடக்கம் பக்கம்

1. நிறுவனத்தின் அமைவிடம் 50

2. நிறுவனத்தின் நோக்கம் 51

3. நிறுவனத்தின் செயற்பாடகள் 52

4. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2018 ஆம் வருடத்துக்கான பரிந்துரைக்கப்பட்ட முகாமைத்துவச் சபை தொடர்பான தகவல்கள் 53

5. 2021 ஆம் வருடத்துக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்விச் சபை உறுப்பினர்கள் 53

6. நிறுவனத்தின் பதவியணி – 2021 54

7. நிறுவன ஒழுங்கு 56

7.1 நிர்வாகம் மற்றும் வழங்கல்கள் பிரிவு.....56

7.2 பயிற்சிப் பரிவு.....57

7.3 திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவு.....66

7.4 உள்ளக கணக்காய்வுப் பிரிவு..... 68

1. நிறுவனத்தின் அமைவிடம்

1.1. கொழும்பு பிரதான காரியாலயம்

2018 ஆம் ஆண்டு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரதான நிர்வாகச் செயற்பாடுகள் 321/1, ஹைலெவல் வீதி, மாக்கும்புர, பன்னிபிட்டிய என்னும் முகவரியில் இடம்பெற்றது. பரந்துபட்டதாக, நாடு பூராகவும் மொழி கற்பித்தல் தொடர்பான பல்வேறு பாடநெறிகளைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்துதல், அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து வினைத் திறன்மிக்கதாக நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளல், நிர்வாக நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லல் ஆகிய நோக்கங்களுடன் கொழும்பு பிரதான காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

1.2 அகலவத்தை பயிற்சி நிலையம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் கொழும்பிலிருந்து சுமார் 100 கி. மீ. தூரத்தில் களுத்துறை மாவட்டத்தில் கலேவத்தை, அகலவத்தை என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்குரிய சுமார் 2.5 ஏக்கர் பரப்புடைய காணி அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் ஆரம்பம் முதல் இற்றை வரை பயிற்சிப் பாடநெறிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஏற்ற ஓர் இடமாகவும் சூழலாகவும் இது பிரசித்தி பெற்றுள்ளது. மொழிக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மிகவும் இனிமையான முறையிலும், செயற்பாட்டு ரீதியிலும் மேற்கொள்வதற்கு ஏற்ற மனோரம்யமான சூழலையும் மனதைக் கவரக்கூடிய அமைப்பினையும் கொண்டமைந்த அகலவத்தை பயிற்சி நிலையம் வதிவிட வசதிகளையும் கொண்டமைந்துள்ளது.



2. நிறுவனத்தின் நோக்கம்

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை உருவாக்குதல்.
- சட்ட எழுத்துருவிலான தேசிய மொழி பெயர்ப்பு சேவை மற்றும் தேசிய உரை பெயர்ப்பாளர் சேவைக்கு நியமனம் செய்யக்கூடிய சிங்களம், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர்களையும் உரைபெயர்ப்பாளர்களையும் உருவாக்குதல்.
- சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளைப் பயிற்றுவிக்கக்கூடிய பயிற்றுவிப்பாளர்களையும் தரமான பயிற்சிகளை வழங்கக்கூடிய மொழிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆசிரியர்களையும் உருவாக்குதல்.
- மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பாளர்களைப் பயிற்றுவிக்கக்கூடிய பயிற்றுவிப்பாளர்களை உருவாக்குதல்.
- பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு மும்மொழித் தேர்ச்சி உடையவர்களைப் பயிற்றுவித்தல்.



3. நிறுவனத்தின் செயற்பாடகள்

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதன் பொருட்டு சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகள் தொடர்பாகவும் நீண்ட காலப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக நடாத்திச் செல்வதற்காக ஆய்வு மற்றும் கற்றல் பெறுபேற்றினைப் பயன்படுத்துதலை நோக்காகக் கொண்டு மொழியினைப் பயிற்றுவிப்பதுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் கற்றல் செயற்பாடுகளை நடாத்துதல்.
- தகைமையுடையவர்களுக்கு மொழிப் பயிற்சி மற்றும் கல்வியைப் பெற்றுக் கொடுத்தலும் அப்பயிற்சி மற்றும் கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாக பூரணப்படுத்தியவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ்களை வழங்குதலும்.
- மொழியினைக் கற்பதற்காக பயிற்சியுடையவர்கள் உள்ளடங்கிய சபையினை நிறுவுதல்.
- மொழியுடன் தொடர்புடைய தகவல்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான நிலையம் ஒன்றை நிறுவுதல்.
- மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பு, மற்றும் சுருக்கெழுத்தாளர் ஆகிய விசேட குழுவினர்களுக்கு சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் விசேட மொழிப் பயிற்சிப் பாடநெறியினை நடாத்துதல்.
- தேவை என்று காணுமிடத்து சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் விருத்தியை ஏற்படுத்துதல், அவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பாக குறித்த அதிகார சபைக்கு சிபாரிசினை முன்வைத்தல், சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலான மொழிகள் மற்றும் ஏனைய சர்வதேச மொழிகள் தொடர்பான மொழியியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அவர்களுக்கு உதவுதல் மற்றும் விருத்தி செய்தல்.



4. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2018 ஆம் வருடத்துக்கான பரிந்துரைக்கப்பட்ட முகாமைத்துவச் சபை தொடர்பான தகவல்கள்

நிறுவனத்தின் குறிக்கோள்களை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்ளும் பொருட்டான சகல தீர்மானங்களும் முகாமைத்துவச் சபையினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் கொண்ட தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் 3(1) ஆவது ஏற்பாட்டிற்கு அமைய கௌரவ அமைச்சர் அவர்களினால் முகாமைத்துவச் சபை நிர்மாணிக்கப்படும்.

2021 ஆம் வருடம் முழுவதும் காணப்பட்ட கோவிட் தொற்று காரணமாக நிறுவனத்தின் செயற்பாடுகள் பாதிப்படைந்ததோடு முகாமைத்துவச் சபையும் நியமிக்கப்படவில்லை.

5. 2021 ஆம் வருடத்துக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்விச் சபை உறுப்பினர்கள்

2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் கொண்ட தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் 07 ஆம் இலக்க ஏற்பாட்டின் கீழ் கௌரவ அமைச்சர் அவர்களின் மூலம் நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளிலே திட்டமிடல், கொள்கைகள், மற்றும் பரிந்துரைகள் என்பவற்றுக்கான நிபந்தனைகள், மற்றும் ஏனைய செயற்பாடுகள் என்பவற்றை முறையாகவும் வினைத்திறன் கொண்டதாகவும் செயற்படுத்துவதற்கு பல்வேறு பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் மொழி, மொழியியல் மற்றும் கல்வித்துறைகளைச் சேர்ந்த கீழ்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்தகைய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் கலாநிதிகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின கீழ் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் நியமிக்கப்படுவர். இவர்கள் நிறுவனத்தின் எதிர்கால இலக்குகளிலே பிரதிநிதித்துவப்படும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது நேரடியாக அதில் செயற்படுவர்.

2021 ஆம் வருடம் முழுவதும் காணப்பட்ட கோவிட் தொற்று காரணமாக நிறுவனத்தின் செயற்பாடுகள் பாதிப்படைந்ததோடு கல்விச் சபையும் நியமிக்கப்படவில்லை.

6. நிறுவனத்தின் பதவியணி – 2021

நிறுவனப் பதவியணியில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாவார். முகாமைத்துவச் சபையின் ஏற்பாடுகளின் கீழ் பணிப்பாளர் நாயகத்தினால் நிறுவனத்தின் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன:

1. நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு
2. நிறுவனத்தின் சகல பதவியணியினரையும் நியமித்தலும் நிர்வாகம் மற்றும் நிறுவன நடிவடிக்கைகளும்
3. நிறுவனத்தினால் நடாத்தப்படும் சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒன்றிணைத்தலும் மேற்பார்வை செய்தலும்

6.1 பதவியணிக்கு ஆட்சேர்த்தல்

2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் வெற்றிடமாக இருந்த பதவிகளின் பொருட்டு, தற்காலிக அடிப்படையில் பின்வருமாறு ஆட்சேர்ப்பு செய்யக்கூடியதாக இருந்தது. இதனடிப்படையில்,

	பெயர்	புதவி	நியமனம் பெற்ற திகதி
1	திரு.ஏ.எம்.எஸ்.என்.அத்தபத்து	முகாமைத்துவ உதவியாளர்	2020.03.02
2	திரு.மகேஸ் தென்னே	முகாமைத்துவ உதவியாளர்	2020.03.02
3	திரு. இந்திக்க பிரசன்ன பண்டார	காரியாலய உதவியாளர்	2020.03.02
	திரு. கே.எம்.பீ.பண்டாரநாயக்க	காரியாலய உதவியாளர்	2020.03.02
5	திரு. எச்.எம்.களன விதுரங்க பண்டார	சாரதி	2020.03.02
6	செல்வி எஸ்.ஆர்.சீ த சேரம்	ஒருங்கிணைப்பு உதவியாளர்	2020.10.06
7	திரு. டீ.எஸ்.சான்த த சில்வா	முகாமைத்தவ உதவியாளர்	2020.10.06
8	செல்வி. எச்.ஜீ.என்.என்.நிஹாரி	முகாமைத்தவ உதவியாளர்	2020.10.06
9	திரு. பீ.டப்.டீ.டீ.பீ.திலகரத்ன	காரியாலய உதவியாளர்	2020.10.06
10	திருமதி. பீ.ஜீ.பீ.குமாரி	காரியாலய உதவியாளர்	2020.10.06
11	செல்வி.எல்.வீரசேகர	ஒருங்கிணைப்பு உதவியாளர்	2020.10.06



6.2 நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட அலுவலர் குழாம்

பதவிப் பெயர	பதவிகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	புதவி வெற்றிடம்
பணிப்பாளர் நாயகம்	01	01	-
பணிப்பாளர்	02	01	01
உதவிப் பணிப்பாளர்	03	02	01
கணக்காளர்	01	01	-
கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர்	05	05	-
நிர்வாக உத்தியோகத்தர்	01	01	-
உள்ளகக் கணக்காய்வாளர்	01	01	-
ஒருங்கிணைப்பு உதவியாளர்	08	10	-
நூலகர்	01	-	01
முகாமைத்துவ உதவியாளர்	08	12	-

மின்சாரம் மற்றும் விசைக் குழாய் இயக்குநர்	01	01	-
சாரதி	05	06	-
காரியாலய உதவியாளர்	04	06	-
மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை	41	45	

7. நிறுவன ஒழுங்கு

நிறுவனத்தின் சேவைகளை இலகுவான முறையில் இட்டுச் செல்வதற்காக நிறுவனமானது பின்வரும் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது:

1. நிர்வாகம் மற்றும் வழங்கல்கள் பிரிவு
2. பயிற்சிப் பரிவு
3. திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவு
4. உள்ளக கணக்காய்வுப் பிரிவு
5. கணக்குப் பிரிவு

7.1 நிர்வாகப் பிரிவு

நிறுவனத்தின் பதவியணியினருக்குரிய அனைத்து நிர்வாக மற்றும் நிறுவன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது இப்பிரிவிலாகும். நிறுவனத்தின் எந்தவொரு பகுதியினதும் காரியாலய நடவடிக்கைகள் தங்குதடையின்றி இயங்கும் வகையில் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி, ஒவ்வொரு பிரிவுக்குமிடையே தொடர்புகளை மிகவும் சிறந்த முறையில் இப்பிரிவு பேணுகின்றது.

அத்துடன் இப்பிரிவு ஏனைய சகல பிரிவுகளுக்கும் தேவையாக அலுவலர் குழாத்தினை குறித்த செயற்பாட்டுத் திட்டத்தினூடாக இணைத்துக் கொள்வதோடு அவர்களின் நிறுவன மற்றும் நிர்வாக நவவடிக்கைகளை நிறைவேற்றி, ஊழியர் நலன்புரி மற்றும் வசதிகளை வழங்கி, அவ்வப்பிரிவுகளின் செயற்பாடுகளானது ஆக்கத்திறன் மிக்க வகையில் வினைத்திறன் உடையதாக அமையும் பொருட்டு தேவையான அடிப்படை வசதிகளை வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

பயிற்சித் திட்டங்களுக்குத் தேவையான பயிற்சி உபகரணங்கள் மற்றும் நிறுவனத்தின் சகல பிரிவுகளுக்கும் தேவையான கணினி இயந்திரங்கள், அலுவலகத்திற்கு அன்றாடம் தேவைப்படுகின்ற காரியாலய உபகரணங்கள், காகிதாதிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல், போக்குவரத்து வசதிகளை வழங்குதல், பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்தப்படுத்தல் சேவையினை வழங்குதல் உட்பட சகல நடவடிக்கைகளும் இப்பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறே நிறுவனத்தின் நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் பகுதியும் இப்பிரிவினாலேயே நிர்வகிக்கப்படுகின்றது.

7.1.1 நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் பகுதி

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இதுவரை காலமும் பயணம் செய்த வெற்றிப் பாதையில் பங்களிப்பு செய்த மற்றுமொரு பிரிவாக, நிறுவனத்தில் பாடநெறிகளை நடாத்திச் செல்லும் வளவாளர்களுக்கு, நிறுவனத்தின் பாடநெறிகளில் பங்குபற்றுபவர்களுக்கு மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்திச் செல்வதற்காக உதவி வழங்கும் நிறுவனத்தின் அலுவலர் குழாத்திற்கு அறிவு மற்றும் தகவல்களைச் சேகரித்துக் கொள்ளும் பொருட்டு வாசிக்கும் வசதியினை நூலகம் பெற்றுக் கொடுக்கின்றது.

மொழி தொடர்பான கற்றலுக்கு விசேட உதவிகளை நல்கக்கூடிய நூல்களால் பூரணமடைந்துள்ள இந்நூலகத்தில் நிர்வாக முகாமைத்துவம், கணக்கீடு, தகவல் தொழிநுட்பம், இலக்கியம், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடப்பரப்புகளுடன் தொடர்புடைய நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக இந்நூலகம் தேசிய மொழியைக் கற்பிக்கும் செயற்பாட்டின் போது அத்தியாவசியமான புத்தகங்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் மற்றும் பாவனையில் உள்ள சொற்பதங்கள், மொழியியல் விமர்சனங்கள் அதேபோன்று மொழிப் பயிற்சி பெறுதல் மற்றும் மொழிப் பயிற்சிக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும், செவிப்புல உபகரணங்களையும் உள்ளடக்கி காணப்படுகின்றது.

இவை தவிர இரண்டாம் மொழிக் கற்றலின்போது தேவைப்படுகின்ற நூல்கள், விமர்சன நூல்கள் தொடர்பான பெயர்ப்பட்டியல், சுயசரிதை நூல்களை வழங்குதல் என்பன இந்நூலகத்தினால் நிறைவேற்றப்படும் மற்றுமொரு சேவையாகும். இதற்கு மேலதிகமாக மொழி தொடர்பான விடயங்கள் குறித்தான தகவல்கள் மற்றும் ஆவணப்படுத்தல் நிலையமாக விளங்குவதுடன், பல்வேறு மொழிகள் தொடர்பாக தேசிய மட்டத்திலும் சர்வதேச அளவிலும் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வு தொடர்பான ஆவணப்படுத்தல்களுக்கான நிலையமாகவும் நூலகம் காணப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நேர்முகத்தேர்வின் மூலம் செல்வி. டீ.சீ.புஞ்சி ஹேவா அவர்கள் நூலகராக தெரிவுசெய்யப்பட்டு, கடமைகளைப் பொறுப்பேற்றார்.

7.2 பயிற்சிப் பிரிவு - அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சிறப்பான பொறிமுறை ஒன்றினை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தும் அடிப்படையில் அரச மொழிக் கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள இந்நிறுவனத்தின் நோக்கினை அடைவதற்குரிய அடிப்படையான பங்களிப்பினை வழங்குவது பயிற்சிப் பிரிவாகும்.

இதனடிப்படையில் நிறுவனத்தின் பிரதான செயற்பாடான வினைத்திறன்மிக்க அரச சேவையின் பொருட்டான அரச ஊழியர்களின் இரண்டாம் மொழித் தேர்ச்சியை நிறைவு செய்யும் வகையில் அரச நிர்வாக சுற்றறிக்கை 18.̇.2020 இன் அடிப்படையில் இரண்டாம் மொழிப் பாடநெறிகளை நடாத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இந்தப் பிரிவின்

மூலம் மேற்கொள்ளப்படும். இந்தப் பிரிவின் கீழ் பாடநெறிகளின் பொருட்டு கிடைக்கப்பெறுகின்ற கடிதங்களை பட்டியல் படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் முதல் பாடநெறியில் பங்குபெறுபவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதல், வழங்கப்படுகின்ற சான்றிதழ்களை அத்தாட்சிப்படுத்தி அனுப்புதல் வரையான அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இங்கே, பயிற்சிப் பிரிவின் மூலம் பிரதானமாக அரச ஊழியர்களுக்கான 3 பிரிவுகளின் கீழ் இரண்டாம் மொழிப் பயிற்சிப் பாடநெறி ஒருங்கிணைப்பு செய்யப்படுகின்றன. அதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிகள் பின்வருமாறு:

1. பதவி நிலை உத்தியோகதத்தர்களுக்கான 200 மணித்தியால இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறி
2. நடுத்தர மட்ட ஊழியர்களுக்கான 150 மணித்தியால (தமிழ் சிங்கள) மொழிப் பாடநெறி
3. ஆரம்ப நிலை ஊழியர்களுக்கான 100 மணித்தியால (தமிழ் சிங்கள) மொழிப் பாடநெறி

மேற்படி அனைத்து பயிற்சி வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு அத்தகைய நடடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதன் பொருட்டு தேவையான முறைமைகளைப் பயன்படுத்தி, பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பில் முறையாக மேற்பார்வை, மற்றும் கண்காணிப்பு செய்வதும் இப்பிரிவின் பிரதான செயற்பாடாகும். அவ்வாறே வளவாளர் பட்டியலை இற்றைப்படுத்துதல் அதனை முறைாகப் பேணுதல், வளவாளர்களை பாடநெறிகளுக்கு அனுப்புதல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்தல் என்பனவும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறே நிறுவனத்தின் நோக்கத்தினை மிகவும் வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதன் பொருட்டு பயிற்சிப் பிரிவின் மூலம் பின்வரும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

1. அரச ஊழியர்களுக்கான பகுதி நேர பாடநெறிகளை நடைமுறைப்படுத்துதல்
2. ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்துதல்
3. பின்தொடரல் மற்றும் காண்காணிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
4. சகல முழு நேரப் பாடநெறிகளின் பொருட்டும் முறையான கண்காணிப்பினை மேற்கொள்ளுதல்

இதற்குப் புறம்பாக நிறுவத்தின் மூலம் வருமானம் ஈட்டும் பாடநெறிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில்,

1. இரண்டாம் மொழி சிங்கம், தமிழ் டிப்ளோமா பாடநெறி
2. இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான சாான்றிதழ் மட்டும் டிப்ளோமா பாடநெறி
3. மொழிபெயர்ப்பு டிப்ளோமா பாடநெறி
4. விசேட தொழில் வல்லுநர்களுக்கான பாடநெறிகள்
5. ஆங்கில மொழிப் பாடநெறி
6. வெளிநாட்டு மொழிகள் தொடர்பான பாடநெறிகள் (ஹிந்தி, யப்பான், கொரியன், அறபு)

7. சைகை மொழிப் பாடநெறி

இத்தகைய பாடநெறிகளுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் பயிற்சிப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்படுவதோடு துரிதமாக வேறுபடுகின்ற நவீன உலகின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் பயிற்சி நடவடிக்கைகளை இற்றைப்படுத்தி ஒருங்கிணைப்பு செய்வதன் பொருட்டு பயிற்சிப் பிரிவு தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றது.

இதன் பொருட்டு இலங்கை சமூகத்தில் பல மொழிகளையும் பயன்படுத்தும் உரிமையை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு பல் மொழிக் கொள்கையின் அடிப்படையில் இனங்களுக்கிடையே சமாதானம், நல்லிணக்கம் என்பன விருத்தி செய்யப்படும் வகையில் மரபு ரீதியான இரண்டாம் மொழி கற்கையில் இருந்து விலகி இதயபூர்வமாக கட்டமைக்கப்பட்ட, கலை இரசனைமிக்க பிரவேசத்துடன் கூடிய நடைமுறை மொழிப் பாவனை மற்றும் நல்லிணக்கத்துடன் கூடிய மனோபாவனையை உருவாக்கும் வகையில் சிறப்பான பாடநெறிகளை வழங்குவது தொடர்பாகப் பயிற்சிப் பிரிவு தொடர்ந்தும் செயற்படும்.

7.2.1 பயிற்சிப் பிரிவின் மூலம் நடாத்தப்பட்ட பாடநெறிகள் தொடர்பான விபரங்கள்

❖ **திறைசேரி மூலம் வழங்கப்படுகின்ற நிதி உதவியின் மூலம் மேற்கொள்ளப்படும் பாடநெறிகள்**

திறைசேரி மூலம் வழங்கப்படுகின்ற நிதிஉதவியின் மூலம் மேற்கொள்ளப்படும் பாடநெறிகள் அரச ஊழியர்களின் பொருட்டான 100 மணித்தியால பாடநெறிகள்				
தொ. இல	மாவட்டம்	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	செலவு ரூபா
1	அநுராதபுர மாவட்டம்	1	90	118,840.00
2	பொலன்னறுவை மாவட்டம்	0	0	-
3	கண்டி மாவட்டம்	0	0	-
4	மாத்தளை மாவட்டம்	2	68	163,440
5	நுவரெலியா மாவட்டம்	0	0	-
6	குருநாகல் மாவட்டம்	1	50	118,203.00
7	புத்தளம் மாவட்டம்	0	0	-
8	அம்பாறை மாவட்டம்	0	0	-
9	மட்டக்களப்பு மாவட்டம்	0	0	-
10	திருகோணமலை மாவட்டம்	0	0	-
11	பதுள்ளை மாவட்டம்	1	50	72,100.00
12	மொனராகலை மாவட்டம்	0	0	-
13	இரத்தினபுரி மாவட்டம்	2	90	234,330
14	கேகாலை மாவட்டம்	0	0	-
15	யாழ் மாவட்டம்	0	0	-
16	கிளிநொச்சி மாவட்டம்	3	120	-
17	மன்னார் மாவட்டம்	0	0	-
18	வவுனியா மாவட்டம்	0	0	-

19	முல்லைத்தீவு மாவட்டம்	0	0	-
20	கொழும்பு மாவட்டம்	0	0	-
21	களுத்தறை மாவட்டம்	1	60	85,944.00
22	கம்பஹா மாவட்டம்	0	0	-
23	மாத்தறை மாவட்டம்	0	0	-
24	ஹம்பாந்தோட்டை மாவட்டம்	0	0	-
25	காலி மாவட்டம்	0	0	-
	முழு எண்ணிக்கை	**11**	**528**	**982,927.00**

திறைசேரி மூலம் வழங்கப்படுகின்ற நிதி உதவியின் மூலம் மேற்கொள்ளப்படும் பாடநெறிகள்
அரச ஊழியர்களின் பொருட்டான 150 மணித்தியால பாடநெறி

தொ. இல	மாவட்டம்	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	செலவு ரூபா
1	அநுராதபுர மாவட்டம்	18	1228	2,457,121.00
2	பொலன்னறுவை மாவட்டம்	7	386	727,258,.00
3	கண்டி மாவட்டம்	12	575	1,387,751.00
4	மாத்தளை மாவட்டம்	3	150	348,722.00
5	நுவரெலியா மாவட்டம்	0	0	-
6	குருநாகல் மாவட்டம்	25	1413	3,158,405.00
7	புத்தளம் மாவட்டம்	5	298	638,403.00
8	அம்பாறை மாவட்டம்	4	182	413,776.00
9	மட்டக்களப்பு மாவட்டம்	5	277	510,284.00
10	திருகோணமலை மாவட்டம்	0	0	-
11	பதுள்ளை மாவட்டம்	10	493	1,092,962.00
12	மொனராகலை மாவட்டம்	8	641	1,289,740.00
13	இரத்தினபுரி மாவட்டம்	14	769	1,475,794
14	கேகாலை மாவட்டம்	7	396	748,462.00
15	யாழ் மாவட்டம்	17	963	1,689,653.00
16	கிளிநொச்சி மாவட்டம்	6	235	753,798.00
17	மன்னார் மாவட்டம்	2	131	184,740
18	வவுனியா மாவட்டம்	5	261	595,468.00
19	முல்லைத்தீவு மாவட்டம்	6	328	566,608.00
20	கொழும்பு மாவட்டம்	8	452	1,138,961.00
21	களுத்தறை மாவட்டம்	13	655	1,588,156.50
22	கம்பஹா மாவட்டம்	10	732	1,196,101,.75
23	மாத்தறை மாவட்டம்	3	145	795,391.00
24	ஹம்பாந்தோட்டை மாவட்டம்	4	170	581,990.00
25	காலி மாவட்டம்	5	260	678,912.00
	முழு எண்ணிக்கை	**197**	**11140**	**24,018,457.25**

திறைசேரி மூலம் வழங்கப்படுகின்ற நிதிஉதவியின் மூலம்
மேற்கொள்ளப்படும் பாடநெறிகள்
அரச ஊழியர்களின் பொருட்டான 200 மணித்தியால பாடநெறிகள்

தொ. இல	மாவட்டம்	பாடநெறிகளின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	செலவு ரூபா
1	அநுராதபுர மாவட்டம்	2	140	359,230.00
2	பொலன்னறுவை மாவட்டம்	2	98	234,190.00
3	கண்டி மாவட்டம்	4	168	515,690.00
4	மாத்தளை மாவட்டம்	1	50	162,315.00
5	நுவரெலியா மாவட்டம்	1	50	262,430.00
6	குருநாகல் மாவட்டம்	3	178	489,505.00
7	புத்தளம் மாவட்டம்	1	59	90,765.00
8	அம்பாறை மாவட்டம்	1	48	185,420.00
9	மட்டக்களப்பு மாவட்டம்	0	0	-
10	திருகோணமலை மாவட்டம்	3	107	472,390.00
11	பதுள்ளை மாவட்டம்	1	196	188,180.00
12	மொனராகலை மாவட்டம்	1	78	131,120.00
13	இரத்தினபுரி மாவட்டம்	2	81	392,193.00
14	கேகாலை மாவட்டம்	1	32	200,396.00
15	யாழ் மாவட்டம்	1	35	213,100.00
16	கிளிநொச்சி மாவட்டம்	0	0	-
17	மன்னார் மாவட்டம்	0	0	-
18	வவுனியா மாவட்டம்	0	0	-
19	முல்லைத்தீவு மாவட்டம்	0	0	-
20	கொழும்பு மாவட்டம்	11	481	1,510,642.52
21	களுத்தறை மாவட்டம்	2	131	240,320.00
22	கம்பஹா மாவட்டம்	3	152	478,110.00
23	மாத்தறை மாவட்டம்	2	74	547,754.00
24	ஹம்பாந்தோட்டை மாவட்டம்	3	117	598,180.00
25	காலி மாவட்டம்	1	44	803,300.00
	முழு எண்ணிக்கை	**46**	**2319**	**8,**075,230.00

❖ **வருமானம் ஈட்டும் பாடநெறிகள்**

வருமானம் ஈட்டும் பாடநெறிகள் - 2021					
தொ.இ	**பாடநெறியின் வகை**	**பாடநெறி எண்ணிக்கை**	**பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை**	**வரவு செலவு ரூபா**	
				வருமானம் ரூபா	**செலவு ரூபா**
வருமானம் ஈட்டும் பாடநெறிகள் - மாக்கும்புர பிரதான காரியாலயம்					
1	அரச ஊழியர்களுக்கான 100 மணித்தியால மொழிப் பயிற்சிப் பாடநெறி	5	281	2,810,000.00	2,245,700.00
2	அரச ஊழியர்களுக்கான 200 மணித்தியால மொழிப் பயிற்சிப் பாடநெறி	4	179	5,495,000.00	3,971,806.00
	எண்ணிக்கை	**9**	**460**	**8,305,000.00**	**6,217,506.00**
வருமானம் ஈட்டும் பாடநெறிகள் - அகலவத்தை பயிற்சி நிலையம்					
1	அரச ஊழியர்களுக்கான 11 நாட்கள் கொண்ட வதிவிட இரண்டாம் மொழிப் பாடநெறி	5	194	4,825,000.00	2,281,663.00
2	அரச ஊழியர்களுக்கான 12 நாட்கள் கொண்ட வதிவிட இரண்டாம் மொழிப் பாடநெறி	2	69	1,725,000.00	496,528.00
	எண்ணிக்கை	**7**	**263**	**6,550,000.00**	**2,778,191.00**
வருமானம் ஈட்டும் படநெறிகள் - தம்புள்ளை பயிற்சி நிலையம்					

	அரச ஊழியர்களுக்கான 100 மணித்தியால மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்	10	399	3,930,000.00	2,912,316.59
	அரச ஊழியர்களுக்கான 200 மணித்தியால மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்	2	70	1,095,000.00	793,089.50
	எண்ணிக்கை	**12**	**469**	**5,025,000.00**	**3,705,406.09**

❖ கண்காணிப்பு மற்றும் பின்தொடரல் அமர்வுகள்

கண்காணிப்பு மற்றும் பின்தொடரல் அமர்வுகள் - 2021				
தொ.இ	**இடம்பெற்ற இடம்**	**இடம்பெற்ற திகதி**	**பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை**	**செலவு**
1	மாவட்ட செயலகம் - பதுள்ளை	2021.02.23	59	63,945.00
2	மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்	2021.03.16	65	66,840.00
3	அகலவத்தைப் பயிற்சி நிலையம்	2021.04.05	31	130,300.00
4	நேசன் பில்டர்ஸ் எஸ்சோசியேசன்ஸ் - குண்டசாலை	2021.04.21	60	35,500.00

இரண்டாம் மொழி ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி - 2021

இரண்டாம் மொழி ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி - 2021				
தொ.இ	**இடம்பெற்ற இடம்**	**காலப்பகுதி**	**பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை**	**மொத்த வருமானம்**
1	அகலவத்தைப் பயிற்சி நிலையம்	2021.01.21 - 2021.02.05	41	410,000.00
2	அகலவத்தைப் பயிற்சி நிலையம	2021.04.05 - 2021.04.09	77	770,000.00
3	நேரலை மூலமாக	2021.08.13 - 2021.08.17	20	100,000.00
4	நேரலை மூலமாக	2021.09.26 - 2021.10.24	50	250,000.00

சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி தொடர்பான விடயங்கள்

சைகை மொழி சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி – 2021			
இடம்பெற்ற இடம்	ஆரம்பிக்ப்பட்ட திகதி	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	மொத்த வருமானம்
நேரலை ஊடாக	20.12.2021	34	1,020,000.00

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆங்கில மொழிப் பாடநெறி		
இடம்பெற்ற இடம்	**ஆரம்பிக்கப்பட்ட திகதி**	**பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை**
பாராளுமன்ற கட்டடத் தொகுதி	15.12.2021	14

பாராளுமன்ற ஊழியர் குழாத்தினருக்கான ஆங்கில மொழிப் பாடநெறி		
இடம்பெற்ற இடம்	**ஆரம்பிக்கப்பட்ட திகதி**	**பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை**
100 மணித்தியால ஆங்கில மொழிப் பாடநெறி	29.12.2021	120
150 மணித்தியால ஆங்கில மொழிப் பாடநெறி	29.12.2021	38
200 மணித்தியால ஆங்கில மொழிப் பாடநெறி	29.12.2021	40
எண்ணிக்கை		198

❖ **வெவ்வேறு செயற்றிட்டங்களின் உதவியுடன் நடாத்தப்பட்ட பாடநெறிகள்**

நிறுவனம்	**புாடநெறி**	**பாடநெறிகளின் எண்ணிக்கை**	**பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை**
என்லீப் நிறுவனம்	ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி	12	487
பிரித்தானிய கவுன்சில்	வளவாளர்களுக்கான ணுழழஅ தொழிநுட்பம் தொடர்பான நேரலை அமர்வுகள்	04	39
பிரித்தானிய கவுன்சில்	வளவாளர்களுக்கான கற்பித்தல் முறைமை தொடர்பான நேரலை அமர்வுகள்	06	154
பிரித்தானிய கவுன்சில்	மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்கான மொழி பெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு நேரலை அமர்வுகள்	08	139
பிரித்தானிய கவுன்சில்	அரச ஊழியர்களுக்கான நடைமுறைத் தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறி	50	893

	மொத்த எண்ணிக்கை	**80**	**1712**

7.3 திட்டமிடல் பிரிவு

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்டவாக்கத்தின் கீழ் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் நோக்கு மற்றும் இலக்குகளை அடைவதற்குத் தேவையான திட்டங்களை வகுத்தல் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பிரதான செயற்பாடாகும்.
பயிற்சி தேவைப்பாடுகளை அடையாளம் காணுதல், அதற்கேற்றவாறான அமைப்பியல் திட்டம் மற்றும் மாதாந்த திட்டங்களை வகுத்து, கணக்குப் பிரிவோடு தொடர்புகொண்டு தேவையான நிதியினை மாதாந்தம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயார்படுத்துதல், வருடாந்த செயற்திறன் அறிக்கைகளைத் தயார்படுத்தி குறித்த பிரிவிற்கு அனுப்பி வைத்தல் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். அவ்வாறே இப்பிரிவின் மூலம் பல்வேறு செயற்திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்படும்

வேலைத்திட்டங்கள் தொடர்பிலான திட்டங்களைத் தயார்படுத்துதல், அதற்குரிய முன்னேற் அறிக்கையினைத் தயார்படுத்துதல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

தம்புள்ள பிராந்திய பயிற்சி நிலையம்

கற்றுக்கொண்ட பாடங்கள் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்), இணைப்பு மொழி ஆங்கிலம் மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகளை கற்பதன் பொருட்டு பிராந்திய அடிப்படையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் 734/1, அநுராதபுர வீதி, தம்புள்ளை என்னும் முகவரியில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த பிராந்திய மத்திய நிலையம் 2022.07.24 ஆம் திகதி அரச சேவைகள், மாகாண சபைகள் உள்:ராட்சி அமைச்சின் கௌரவ அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2475 சதுர அடிகளைக் கொண்ட இந்த மத்திய நிலையம் மண்டபம், காரியாலயம், உணவு உட்கொள்ளும் அறை என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. தற்போது இந்த மத்திய நிலையத்தில் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) மேற்பார்வையின் கீழ் முகாமைத்துவ உதவியாளர்கள் மூவர், காரியாலய உதவியாளர்கள் இருவர் மற்றும் சாரதி ஒருவர் சேவையாற்றுகின்றனர்.

மாத்தளை, கண்டி, குருநாகல், அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் மத்தியில் அமையப் பெற்றிருக்கும் இந்த மத்திய நிலையத்தின் மூலம் மேற்படி மாவட்டங்கள் உள்ளடங்கலாக நாடு பூராகவும் அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வினைத்திறன் மிக்க வகையில் முறையாக மொழிப் பாடநெறிகளை நடாத்துவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

2020 ஆம் ஆண்டு முதல் நாடு பூராகவும் பரவிக் காணப்பட்ட கொரோனா தொற்று காரணமாக இந்த மத்திய நிலையத்தின் மூலம் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த இலக்கை அடைய முடியாவிட்டாலும் 2021 ஆம் ஆண்டு பல்வேறு சவால்களுக்கு

மத்தியிலும் குறிப்பிடத்தக்க மட்டத்திலான செயற்திறனை அடைவதற்கு முடியுமாக இருந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

தம்புள்ளை பிராந்திய மத்திய நிலையத்தின் மூலம் நடாத்தப்பட்ட வருமானம் ஈட்டும் பாடநெறிகள் - நிறைவு செய்யப்பட்ட பாடநெறிகள

தொ.இ	பாடநெறி	இடம்	கால எல்லை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை	வருமானம் ரூபா	செலவு ரூபா	இலாபம் ரூபா
	150 மணித்தியால சிங்களம் / தமிழ் பாடநெறி						
1	யடவத்தை கல்வி வலய ஆசிரியர்களுக்கான தமிழ் மொழிப் பாடநெறி	யடவத்தை தேசிய பாடசாலை (நேரலை)	2021.10.21-2021.11.18	58	150,000	138,465	11,534
2	அரச ஊழியர்களுக்கான 150 மணித்தியால தமிழ்ப் படநெறி	தம்புள்ளை பயிற்சி நிலையம் - (நேரலை)	2021.11.25-2021.12.19	35	350,000	136,791	213,209
3	பாடசாலை ஆசிரியர்களுக்கான தமிழ் மொழிப் பாடநெறி	தம்புள்ளை பயிற்சி நிலையம் - (நேரலை)	2021.11.30-2021.12.23	53	530,000	137,509	392,491
4	பாடசாலை ஆசிரியர்களுக்கான தமிழ் மொழிப் பாடநெறி	மெத்திரிகிய தேசிய பாடசாலை	2021.12.05-2021.12.30	40	340,000	190,434	149,566
	முழு எண்ணிக்கை			**186**	**1,370,000**	**603,199**	**766.800**
	200 மணித்தியால தமிழ் / சிங்கள மொழிப் பாடநெறி.						
1	நிர்வாக சேவை உத்தியோத்தர்களுக்கான தமிழ் மொழிப் பாடநெறி	தம்புள்ளை பயிற்சி நிலையம் - (நேரலை)	2021.10.26-2021.12.30	38	585,000	153,538	431,462
2	கிழக்கு மாகாண நிர்வாக சேவை உத்தியோத்தர்களுக்கான தமிழ் மொழிப் பாடநெறி	தம்புள்ளை பயிற்சி நிலையம் - (நேரலை)	2021.11.05-2021.12.12	32	510,000	148,373	361,627
	எண்ணிக்கை			**70**	**1,095,000**	**301,910**	**793,090**
	முழு எண்ணிக்கை		**-**	**256**	**2,465,000**	**923,996**	**1,541,004**

.

தொடரும் பாடநெறிகள்

தொ. இ	புாடநெறி	இடம்	ஆரம்ப திகதி	பங்குபற் றுநர்களி ன் எண்ணிக் கை	வருமானம் ரூபா
	150 மணித்தியால சிங்கள /தமிழ் பாடநெறி				
1	மாத்தளை மாவட்டம் சுகாதார பணியாளர்களுக்கான தமிழ் மொழிப் படநெறி	தம்புள்ளை பிராந்திய மத்திய நிலையம் - (நேரலை)	2021.12.16	38	380,000
2	இலங்கைப் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் படநெறி (குழு - 01)	தம்புள்ளை பிராந்திய மத்திய நிலையம் - (நேரலை)	2021.12.18	50	-
3	இலங்கைப் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் படநெறி (குழு - 02)	தம்புள்ளை பிராந்திய மத்திய நிலையம் - (நேரலை)	2021.12.19	48	-
4	நாவுல பாடசாலை ஆசிரியர்களுக்கான தமிழ் மொழிப் பாடநெறி	தம்புள்ளை பிராந்திய மத்திய நிலையம் - (நேரலை)	2021.12.27	37	180,000
5	மெத்திரிகிரிய கல்வி வலய ஆசிரியர்களுக்கான தமிழ் மொழிப் பாடநெறி	தம்புள்ளை பிராந்திய மத்திய நிலையம் - (நேரலை)	2021.12.05	37	185,000
	எண்ணிக்கை			**210**	**745,000**

7.4 கணக்குப் பிரிவு

நிறுவனத்தின் அனைத்து நிதி நிர்வாகம் மற்றும் கணக்கியல் செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்படுவது கணக்கியல் பிரிவின் மூலமாகும். நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அதிகாரி பணிப்பாளர் நாயகமாகக் காணப்படுகின்ற அதேவேளை, நிதி நடவடிக்கைகள், கணக்கியல் நடவடிக்கைகள் என்பவற்றுக்குப் பொறுப்பாக கணக்காளர் இருப்பார்.

கணக்கியல் பிரிவின் பிரதான பொறுப்புகள்

பிரதான கணக்கியல் அதிகாரி என்னும் வகையில் அமைச்சின் செயலாளருக்கும் கணக்கியல் அதிகாரி என்னும் வகையில் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் நிதிப் பொறுப்புகளை சரிவர ஈடு செய்வதற்கும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுவதற்கும் உதவியாக இருத்தல்.

- அரசாங்கத்தின் நிதிச்சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்குகள் என்பவற்றுக்கு ஏற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துதல்.

- நிதி முகாமைக் கணக்கியல் நிர்வாகத் தொகுதி ஒன்றை செயற்படுத்துதல்.
- நிதித் திட்டங்களைத் தயாரித்தலும் அவற்றைப் புதுப்பித்தலும்.
- நடப்பு மற்றும் சரியான நிதி அறிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- வருட இறுதிக் கணக்கினைத் தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒப்படைத்தல்.
- வரிக் கொள்கைகள் மற்றும் ஏனைய அன்றாடத் தேவைகளுக்கு ஏற்ப இணங்கிச் செயற்படுதல்.
- குறிப்பிட்ட நேரத்தில் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கூலிகளை வழங்குதல்.
- நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பாடநெறிகளின் நிதி நடவடிக்கைகளை நிர்வகித்தலும், தேவையான நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும்

முக்கிய கணக்கியல் கொள்கைகள்

1. நிறுவனம் தொடர்பான தகவல்கள்

1.1 தொடக்கமும் சட்டவாக்கமும்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் 2007 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு நியதிச் சட்ட சபையாகும். அதன் பயிற்சி நிலையம் அகலவத்தை, கலேவத்தை என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

2. <u>கணக்கியல் கொள்கைகள்</u>

2.1. <u>நிதிக் கூற்றுகளைத் தயாரித்தலின் அடிப்படைகள்</u>

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கணக்கறிக்கை இலங்கை அரச பிரிவின் கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்படுகின்ற அதேவேளை, பொருத்தமான வகையில் அந்தக் கணக்கறிக்கைத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் கணக்கியல் கொள்கைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2.2. <u>ஒப்பீட்டுத் தகவல்கள்</u>

நடைமுறை வருடத்தின் நிதிக்கூற்றுக்களைப் பரீட்சித்து விளங்கிக்கொள்ளும் வகையில் தேவையான முன்னைய வருட ஒப்பீட்டுத் தகவல்களும் நிதிக்கூற்றுக்களிலே காட்டப்படுகின்றன.

2.3. <u>சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள்</u>

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியானது, செலவு அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியின் ஒன்றுதிரட்டப்பட்ட தேய்மானப் பெறுமதியில் கழிக்கப்பட்டதன் பின்னரான பெறுமதியை விடவும் மிகவும் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் கணக்கறிக்கைகளிலே காட்டப்பட்டுள்ளன. இத்தகைய

சொத்துக்களின் செலவுகள் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதி அவற்றின் வாழ்நாள் காலப்பகுதிக்குள் சமனாகப் பிரிந்து செல்லும் வகையில் பின்வரும் தேய்மான விகிதத்தின் அடிப்படையில் தேய்மானத்தை ஒதுக்குவது மேற்கொள்ளப்படுகின்றது.

	விகிதம் (மூ)
கட்டடங்கள் மற்றும் நிர்மாணப் பணிகள்	2.5
வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	10
நூலகப் புத்தகங்கள்	10
இயந்திரங்கள், உபகரணங்கள்	20
வாகனங்கள்	25
கணினி	25

2014 ஆம் ஆண்டு வரை குறிப்பிட்ட சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலே அந்த முழு வருடத்துக்குமான தேய்மானத்தை வேறுபடுத்துகின்ற, அந்த சொத்தினைப் பாவனையில் இருந்து அகற்றும்போது பாவனையில் இருந்து அகற்றுகின்ற முழு வருடத்துக்குமான தேய்மானத்தை வேறுபடுத்துவது இடம்பெறவில்லை. 2014 ஆம் ஆண்டு முதல் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு தேய்மானத்தை ஒதுக்குவது இடம்பெற்றுள்ளது.

2.4 பணிக்கொடை ஒதுக்கீடு

ஓர் ஊழியர் சேவையில் இணைத்துகொள்ளப்பட்ட நாள் முதல் சேவைக் காலம் ஒரு வருடம் பூர்தியாகியுள்ள அனைத்து ஊழியர்களினதும் முன்னைய கணக்கு வருடத்தின் இறுதி மாதத்தில் பெற்றுக் கொண்ட மாதாந்த சம்பளத்தின் அரைவாசிக்கு நிகரான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை நிதி ஒதுக்கப்படுகின்ற அதேவேளை, 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைய பணிக்கொடை நிதியம் செலுத்துவதற்கு உறுதி செய்யப்படுவது 5 வருட திருப்திகரமான வேலைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர் ஒருவர் சேவையிலிருந்து விலகும் போதாகும்.

2.5 கிடைக்க வேண்டிய நிலுவை

கிடைக்கப்பெறவேண்டிய கணக்கு மீதிகள் எதிர்பார்க்கப்பட்ட தீர்வை செய்யக்கூடிய பெறுமதிக்கு கணக்குக் கூற்றுக்களிலே காட்டப்படுகின்ற அதேவேளை, கணக்கு வருடத்தின் இறுதியில் கிடைக்கப்பெறவேண்டிய கணக்கு மிகுதிகளின் தீர்வை செய்யக்கூடிய எதிர்பார்க்கப்படாத பெறுமதி மதிப்பிடப்படுகின்றது. தீர்க்கப்படாத கடன் மிகுதி அறியப்பட்ட வருடத்தின் கணக்குக் கூற்றுக்களிலே சரிப்படுத்தப்படுகின்றது.

2.6 பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை

காசுப் பாய்ச்சல் கூற்றுக்களை சரிபடுத்துகையில் கையிலுள்ள பணம், வங்கி மீதி, வங்கிப் பற்றுப் பெறுமதி ஆகியவை பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவையாக அறியப்படுகின்ற அதேவேளை, நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் வங்கிப் பற்றுப் பெறுமதி காட்டப்படும்.

2.7 ஐந்தொகையை குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் பூரணப்படுத்தல்

ஐந்தொகையில் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இடம்பெற்றுள்ள விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தேவையான இடங்களில் சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களிலே அவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.8 பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்தல்

நிதி நிலைமைக்கூற்று சரிப்படுத்தும் திகதியில் உறுதியாகக் கணக்கிடக்கூடிய அனைத்துப் பொறுப்புகளினதும் பெறுமதி இந்த நிதிக் கூற்றுகளிலே உள்வாங்கப்படுகின்ற அதேவேளை, உறுதியாகக் கணக்கிட முடியாத பொறுப்புக்கள் தொடர்பில் தேவையான வகையில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.9 ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய ஒதுக்கீடு

ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன உரித்துடைய அதேவேளை, அவை முறையே 12மூ உம் 3மூ உம் ஆக நிறுவனத்தின் மூலம் பங்களிப்பு நிதியம் செலுத்தப்படுகின்றது.

2.10 வருமானம்

2.10.1 நடைமுறைக் கணக்கின் அடிப்படையில் கிடைக்கப்பெறும் மானியங்கள்

திறைசேரியினால் நடைமுறைச் செலவாக கிடைக்கப்பெறும் மானியம் நிறுவனத்தின் வருமானமாகக் கருதப்பட்டு நிதிக்கூற்றுகளிலே உள்ளடக்கப்படுகின்ற அதேவேளை, நிறுவனத்தின் அனைத்து வருமானமும் விரிவான வருமானக் கூற்றுகளிலே காட்டப்படும்.

2.10.2 மூலதனமும் மானியங்களும்

திறைசேரி மூலம் மூலதனச் செலவாகக் கிடைக்கப்பெறும் மானியம் இங்கே உள்ளவாங்கப்படுகின்ற அதேவேளை, மூலதனமூடான செலவுகள் இங்கே மேற்கொள்ளப்படும்.

2.11 செலவு

நிறுவனத்தின் நாளாந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான மீண்டெழும் செலவுகள் மற்றும் வருமான உற்பத்திச் செயற்பாடுகளின் பொருட்டான குறிப்பிட்ட வருடத்திலே மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் அனைத்தும் இங்கே காட்டப்படுகின்றன.

2.12 இருப்பு

பாடநெறிகளுக்குத் தேவையான புத்தகங்கள், எழுது கருவிகள் உட்பட அனைத்து இருப்புகளின் பெறுமதியும் செலவு மதிப்பிற்கு ஏற்ற வகையில் நிதிக் கூற்றுக்களிலே காட்டப்படுகின்றன.

3 நிதிக் கொள்கை மாற்றங்கள்

3.1 பெறுமானத் தேய்வுக் கொள்கைகள்

2014 ஆம் ஆண்டு வரை தேய்மானத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டதான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலே அந்த முழு வருடத்துக்குமான தேய்மானத்தை ஒதுக்குதல் மற்றும் அந்தச் சொத்தினைப் பாவனையில் இருந்து அகற்றும்போது பாவனையில் இருந்து அகற்றுகின்ற முழு வருடத்துக்ககுமான தேய்மானத்தை ஒதுக்காதிருத்தல் என்னும் கொள்கையினை, 2014 ஆம் ஆண்டின் பின்னர் குறிப்பிட்ட சொத்துக் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட திகதியினைக் கருத்திற் கொள்ளப்பட்டு தேய்மானத்தை ஒதுக்கும் கொள்கை என வேறுபடுத்தப்பட்டுள்ளது.

4 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாச்சல் கூற்றுத் தாயரிக்கப்படும்போது நேரற்ற முறையை நடைமுறைப்படுத்தும் அதேவேளை, பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைக்குள்ளே வங்கி மீதி / மிகைப்பெறுமதி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

2021/12/31

	குறிப்பு	2021 ரூபா.	2020 ரூபா
சொத்துக்கள்			
அசையாத சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறிகள், உபகரணங்கள்	06	41,066,102	47,994,529
அசையும் சொத்துக்கள்			
கிடைக்க வேண்டிய மீதி	07	9,949,531	15,088,531
மொத்த எழுது கருவிகள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்		1,575,782	1,638,812
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை	08	75,236,348	72,255,819
மொத்தச் சொத்துக்கள்		127,827,763	136,977,691

நிதியம், சேமிப்பு மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம்		13,015,468	13,015,468
திரண்ட மிகை (பற்றாக்குறை)		40,503,368	57,135,277
ஒன்றுதிரண்ட மூலதனம்		47,000,892	47,000,892
		100,519,728	117,151,637
அசையாத சொத்துக்கள்	09		
பணிக்கொடை ஒதுக்கீடு		5,529,673	4,675,348
		791,272	-
		6,320,945	4,675,348
அசையும் பொறுப்புக்கள்			
வாணிபம் மற்றும் ஏனைய செலுத்த வெண்டிய பெறுமதிகள்	10	19,165,476	13,524,317
சேர்ந்த செலவுகள்	11	1,821,614	1,626,389
		20,987,091	15,150,706
முழு நிதியமும் பொறுப்புகளும்		**127,827,763**	**136,977,691**

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதிக் கூற்றுக்களில் மிகவும் முக்கிய ஒன்றாக நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி மற்றும் கடந்த வருடத்துக்கான மேலதிகப் பற்றுக்கள் தொடர்பாக உண்மையான மற்றும் நடுநிலைமையான நோக்கினை வழங்குவதாக நாம் சான்று பகர்கின்றோம். இந்த நிதிக்கூற்று அரச சட்ட நெறிமுறைகளின் தேவைப்பாடுகளுடன் ஏற்புடையது.

கணக்காளர் பணிப்பாளர் நாயகம்

இலக்கம் 01 முதல் 03 வரையான பக்கங்களில் உள்ளடக்கப்படும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் இத்தகைய நிதிக்கூற்றுக்களின் முக்கிய அங்கமான 8 முதல் 12 வரையான பக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குறிப்புகள் ஆகியன முகாமைத்துச் சபையின் அங்கீகாரத்துடன் இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் நிறுவனத்தின் தலைவரின் பொறுப்பாகும். புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளடங்கிய முதலாவது முகாமைத்துவச் சபைக் கூட்டத்தில் இந்நிதிக் கூற்று முன்வைக்கப்பட்டது.

தலைவர் முகாமைத்துவச் சபை உறுப்பினர்

2021.12.31 உடன் முடிவடையும் வருடத்துக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள்

		2021	2022
	குறிப்பு	ரூபா	ரூபா
வருமானம்			
திறைசேறி ஒதுக்கீடு	01	78,283,909	69,281,000
அமைச்சு ஒதுக்கீடு		22,732,875	16,382,450
வேறு வருமானங்கள்	02	2,383,237	2,469,923
		103,410,021	88,133,373
செலவு			
நிர்வாகச் செலவுகள்	03	(77,188,762)	(69,896,731)
பயிற்சிப் பாடநெறிகளுக்கான செலவுகள்	04	(40,055,155)	(10,274,234)
கண்காணிப்பு நடவடிக்கைகளின் மீதான மிகை / (பற்றாக்குறை)		(13,833,896)	7,962,408
நிதிச் செலவுகள்	05	(15,450)	(15,540)
குத்தகைக்கு முன்னரான மிகை / (பற்றாக்குறை)		(13,833,896)	7,962,408
குத்தகை		-	-
வருடத்துக்கான மிகை / (பற்றாக்குறை)		(13,849,346)	7,946,868

2021/12/31 இல் முடிவடையும் வருடத்துக்கான உரிமை மாற்றுக் கூற்றுக்கள்

	பங்கு மூலதனம்	திரண்ட மிகை / பற்றாக்குறை	ஒன்று திரண்ட மூலதனம்	எண்ணிக்கை
2021/01/01 இற்கு மீதி	13,015,468	43,096,339	47,000,892	103,112,700
முன்னைய வருடத்துக்கான சரிப்படுத்தல்கள்	-	6,092,070	-	6,092,070
வருடத்துக்கான மிகை / (பற்றாக்குறை)	-	7,946,868	-	7,946,868
2021/12/31 இற்கு மீதி	13,015,468	57,135,277	47,000,892	117,151,638
முன்னைய வருடத்துக்கான சரிப்படுத்தல்கள்	-	(2,782,563)	-	(2,782,563)
வருடத்துக்கான மிகை / (பற்றாக்குறை)	-	(13,849,346)	-	(13,849,346)
2021/12/31 இற்கு மீதி	**13,015,468**	40,503,368	47,000,892	100,519,729

2021/12/31 முடிவடையும் வருடத்துக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	2021	2020
	ரூபா	ரூபா
வரிக்கு முன்னரான மிகை / (பற்றாக்குறை)	**(13,849,346)**	7,946,868
நிதியல்லாத வேறுபாடுகளுக்கான சரிப்படுத்தல்கள்		
நிலுவை	**7,662,017**	10,365,424
முன்னைய வருடத்துக்கான சரிப்படுத்தல்கள்	**(2,782,563)**	6,092,070
இடர்பாடுகளுக்கான ஒதுக்கீடு	**854,325**	1,251,155

	(8,115,568)	25,655,517
வட்டி வருமானம்	**(1,892,001)**	(2,217,173)
இடர் கொடுப்பனவுகள்	**(-)**	(287,900)
தொழிற்படு மூலதன வேறுபாடுகளுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் / நட்டம்	**10,007,568**	23,150,444
தொழிற்படு மூலதன வேறுபாடுகள்		
வாணிபம் மற்றும் வேறு கிடைக்க வேண்டிய பெறுமதிகள் குறைதல் / அதிகரித்தல்	**(5,139,000)**	3,917,500
வாணிபம் மற்றும் வேறு கிடைக்க வேண்டிய பெறுமதிகள் குறைதல் / அதிகரித்தல்	**(5,836,384)**	4,915,497
இருப்பு அதிகரித்தல் / குறைதல்	**(63,030)**	(368,057)
	1,030,845	13,949,389
செயற்பாட்டு நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற நியம காசுப் பாய்ச்சல்	**1,030,845**	13,949,389
முதலீட்டு நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற காசுப் பாய்ச்சல்		
சொத்துக்கள், பொறிகள், உபகரணங்களைக் கைப்பற்றுதல்	**(733,590)**	(89,000)
வட்டி வருமானம்	**1,892,000**	2,217,173
முதலீட்டு நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற நியம காசுப் பாய்ச்சல்	**1,158,410**	2,128,173
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகளின் நியம வேறுபாடுகள்	**2,980,528**	16,077,662
வருட ஆரம்பத்தில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை	**72,255,819**	56,178,157
வருட இறுதியில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை	**75,236,348**	72,255,819
குறிப்பு அ – பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை		
வயிகியிலுள்ள பணம்	**75,236,348**	72,255,819
	75,236,348	72,255,819

2021/12/31 இல் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புகள்

குறிப்பு – 01 வருமானம்	2021	2020
	ரூபா	ரூபா.
நடைமுறைச் செலவுகளுக்கான ஒதுக்கீடு	53,027,500	61,181,000
மூலதனச் செலவுகளுக்கான ஒதுக்கீடு		
திறைசேறியிலிருந்து கிடைக்கப்பெற்றவை	(26,000,000)	8,100,000
அசையா சொத்து	(733,591)	
	25,266,409	
	78,293,909	69,281,000

குறிப்பு 02 – வேறு வருமானங்கள்		
பயிற்சிப் பாடநெறிகளின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம்	22,732,875	16,382,450
விலை மனுகோரல் - வருமானம்	145,000	45,000
வட்டி வருமானம்	1,892,001	2,217,173
சம்பளமற்ற விடுமுறை மற்றும் சமபளக் குறைப்பு	-	64,175
மண்டப மற்றும் வதிவிடக் கட்டணங்கள்	29,081	-
வேறு வருமானங்கள்	317,156	143,575
	2,383,237	2,469,923

குறிப்பு – 03 நிர்வாகச் செலவுகள்		
ஊழியர் வேதனம்		
சம்பளம் மற்றும் வேதனம்	22,469,833	20,014,086
ஊ.சே.நி 12மூ	2,681,990	2,401,690
ஊ.ந.நி 3மூ	670,497	600,423
மேலதிக நேர கொடுப்பனவுகள்	265,641	52,286
விடுமுறை கால கொடுப்பனவுகள்	5,661,	26,062
வேறு கொடுப்பனவுகள்	501,460	559,438

வாகனக் கொடுப்பனவுகள்	1,800,000	1,627,586
எரிபொருள் கொடுப்பனவுகள்	739,705	638,662
பயிற்றுவிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள்	361,000	223,250
பங்குபற்றல் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகள்	85,000	
தலைவருக்கான கொடுப்பனவுகள்	637,500	775,862
ஊக்குவிப்புக் கொடுப்பனவு	630,000	-
பணிக்கொடை செலவுகள்	854,325	1,251,155
போக்குவரத்து – வெளிநாடு	435,399	479,348
காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைகள்	1,444,697	553,868
எரிபொருள் கொடுப்பனவு	1,029,563	417,706
சீருடை	28,000	24,000
உபசரிப்பு செலவுகள்	333,589	90,333
பத்திரிகை மற்றும் வேறு	41,718	-

நடைமுறைச் செலவுகள்

வாகனம்	1,544,310	544,304
பொறிகள் மற்றும் இயந்திரங்கள்	527,316	358,348
குணினி	185,181	57,630
கட்டடம்	276,845	263,294
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	38,595	24,048

சேவைகள்

தபால் மற்றும் போக்குவரத்து	840,705	947,348
மின்சாரம்	1,353,253	1,074,157
நீர்	136,976	132,634

கூலி	17,323,695	16,200,000
போக்குவரத்து	34,183	95,671
பாதுகாப்புச் சேவை	3,619,667	2,478,860
சுத்திகரிப்புச் சேவை மற்றும் மேலதிக அலுவலக உதவியாளர் குழாத்திற்கான செலவுகள்	3,794,391	2,879,416
விளம்பரம்	101,223	101,088
சுத்திகரிப்புச் செலவுகள்	240,001	522,404
முன்னெடுக்கும் குத்தகை	3,557,518	3,557,495
கணக்காய்வுக் கட்டணம்	330,000	360,000
கணினி கட்டணம்	71,225	-
சட்டத்தரணிக்கான கட்டணம் மற்றும் முத்தரைக் கட்டணம்	300,000	
வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக் கட்டணம்	186,478	-
வேறு	49,606	198,853
தேய்மானம்		
கட்டடம் மற்றும் நிர்மாணப் பணிகள்	648,569	648,569
சொத்துக்கள், பொறிகள், உபகரணங்கள்	50,929	2,692,409
வீட்டு உபகரணங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள்	1,927,016	1,919,517
வாகனங்கள்	4,950,000	4,950,000
குணினி	66,076	154,929
	19,428	-
	77,188,762	69,896,731

குறிப்பு – 04 பயிற்சிப் பாடநெறிகளுக்கான செலவுகள்

	2021	2020
	ரூபா	ரூபா
வளவாளர் கொடுப்பனவுகள்	30,828,819	2,151,402
காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைகள்	1,430,444	452,321
தபால் மற்றும் தொடர்பாடல்	547,456	354,886
உணவு மற்றும் உபசரிப்புச் செலவுகள்	2,336,397	1,611,001
வதிவிடம்	216,695	116,800

பயிற்சிப் பாடநெறி கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புக் கட்டணம்	-	36,000
ஆசிரியர் கையேடு மற்றும் பாடப் புத்தகங்கள்	50,000	240,000
சான்றிதழ் மற்றும் கையேடு அச்சுச் செலவுகள்	210,800	1,325,045
உதவி அலுவலகக் குழாத்தினர் சேவை	45,928	-
மேலதிக நேரக் கொடுப்பனவு	692,011	316,451
விடுமுறைக் கால கொடுப்பனவுகள்	268,531	78,889
எரிபொருள்	690,507	400,919
மின்சாரம்	37,934	396,417
தண்ணீர்	119,131	158,731
போக்குவரத்து – உள்நாடு	327,210	238,544
பயிற்சி மற்றும் தற்காலிக ஊழியர்களுக்கான கட்டணம்	1,782,029	1,616,921
வாகனப் பராமரிப்பு	-	2,850
கணினி பராமரிப்பு	-	1300
நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்	-	68,945
கட்டட பராமரிப்பு	-	24,240
அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு	-	320
போக்குவரத்து மற்றும் தலைவருக்கான கொடுப்பனவு	46,600	-
வினம்பரம்	12,500	48,276
தங்குமிடம் மற்றும் அலுவலகத் தேவைகள்	146,240	87,276
கூலி மற்றும் விரிவுரை மண்டப கட்டணம்	-	412,305
மொழிபெயர்ப்பு, பரீட்சை மற்றும் ஆலோசனைக் கட்டணம்	37,953	-
சுத்திகரிப்புக் கட்டணம்	227,350	--
வேறு சேவைகள்	620	134,603
	40,055,155	10,274,234

குறிப்பு -05 மூலதனச் செலவுகள்

வண்கிக் கட்டணம்	15,450	15,450
	15,450	15,450

2021.12.31 உடன் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக குறிப்புகள்

குறிப்பு – 07 வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மிகுதி	2021	2020
	ரூபா	ரூபா
முற்கொடுப்பனவு – வருமானம்	-	-
கிடைக்க வேண்டிய மிகுதி – ஹேவாசிங்க	58,983	58,983
கிடைக்க வேண்டிய மிகுதி – துரம்	17,163	17,163
கிடைக்க வேண்டிய மிகுதி - நாபாவல	9,650	9,650
கிடைக்க வேண்டிய மிகுதி – விக்கிரமசிங்க	9,650	9,650
இணையத்தளத்தின் பொருட்டு செலுத்திய முற்கொடுப்பனவு	-	93,000
பண்டிகை முற்கொடுப்பனவு		
கிடைக்க வேண்டிய மிகுதி – அரச சேவைகள் அமைச்சு	104,000 275,000	-
கிடைக்க வேண்டிய மிகுதி - இலங்கை மின்சார சபை	-	900,000
வைப்பு	161,500	161,500
கட்டத்துக்கான முற்கொடுப்பனவு	6,519,500	6,519,500
கிடைக்க வேண்டிய மிகுதி – புத்த சாசன அமைச்சு	165,000	165,000
கிடைக்க வேண்டிய மிகுதி – சுகாதார அமைச்சு	338,800	4,863,800
கிடைக்க வேண்டிய மிகுதி – நிரல் அமைச்சு	2,290,285	2,290,285
	9,949,531	15,088,531

குறிப்பு – 08 பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை

	ரூபா.	ரூபா.
இலங்கை வங்கி – ஊ / யு 0007442918		
மூலதனக் கணக்கு	758,102	1,465,131
நடைமுறைக் கணக்கு	997,002	4,895,320
அமைச்சு வேலைத்திட்டம்	270	270
வருமானக் கணக்கு	9,378,106	3,684,230
மொழிப் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல்	6,150	6,150

சேமிப்புக் கணக்கு யு / ஊ - டீழுஊ 79712746	64,096,718	62,204,717
	75,236,348	72,255,819

குறிப்பு - 09

நிலையான சொத்து, கொள்வனவு என்பவற்றின் பொருட்டு திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதி	791,272	-
பணிக்கொடை ஒதுக்கீடு	5,529,673	4,675,348
	6,320,945	4,675,348

குறிப்பு – 10 வர்த்தகம் மற்றும் வேறு கொடுப்பனவுகள்

	ரூபா.	**ரூபா.**
விலைமனுக் கொரல் வைப்பு – மீள செலுத்த வேண்டியது	542,000	870,600
வளவாளர் கொடுப்பனவு	13.,976,035	5,698,735
அச்சு மற்றும் காகிதாதிகள்	-	274,250
விக்கிரமாரச்சி நிர்மாணம் - அகலவத்தைப் பயிற்சி நிலையம்	637,946	637,946
கடன் உரித்தாளர்கள்	-	324,000
லிமா வடிவமைப்பாளர்கள் - உள்ளக வடிவமைப்பு	-	2,039,290
கணக்காய்வுக் கட்டணம் - செலுத்த வேண்டியது		2;039,290
கடன் உரித்தாளர்கள் - ஒலிபரப்பு மற்றும் தொலை ஒலிபரப்பு வேலைத்திட்டம்	1,050,000	720,000
இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபனம் மற்றும் ஒலிபரப்பு வேலைத் திட்டங்கள்	2,959,496	2,959,496
	19,165,476	13,524,317

குறிப்பு 10 – திரண்ட செலவு	2021	2020
	රු.	රු.
உள்நாட்டு போக்குவரத்து செலவுகள்	9,020	21,420
தபால் மற்றும் தொடர்பாடல்	126,884	145,145
மின்சாரக் கட்டணம்	83,306	86,849
நீர்	2,640	3,829
பாதுகாப்புச் சேவை	346,775	218,315
உணவு மற்றும் உபசரிப்பு	-	1,435
மேலதிக நேரக் கொடுப்பனவு	206,175	15,000
விடுமுறை நாள் கொடுப்பனவுகள்	59,995	11,183
அமைய மற்றும் பயிற்சி கொடுப்பனவுகள்	52,500	256,823
மொழிபெயர்ப்புக் கட்டணம்	37,953	-
கூலி – செலுத்த வேண்டியது	-	27,305
சுத்திகரிப்புச் சேவை	379,847	270,000
பாடப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் கையேடுகளைத் தயாரித்தல்	290,000	240,000
வீட்டு உபகரணங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் செலுத்தவேண்டியது	226,521	226,521
ஏனைய திரண்ட செலவுகள்	-	53,292
	1,821,614	1,626,389

குறிப்பு – 12 முன்னைய வருடத்துக்கான சரிப்படுத்தல்கள்	2021	2020
	ரூபா	ரூபா
2016 ஆம் வருடத்தில் செலுத்தப்பட்ட முற்கொடுப்பனவு	-	6,250,000
மேலதிக ஒதுக்கீடு	(279,199)	-
அறவிடப்பட வேண்டிய பணம் - சுகாதார வைத்திய அதிகாரி	2,975,000	-
முன்னைய வருடத்துக்கான பாதுகாப்புச் சேவை கட்டணம்	-	(174,259)
வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களுக்கான ஒதுக்கீடு	-	16,329
	86,762	
	2,782,563	6,092,070

குறிப்பு – 13

சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட திரு. பீ.எம்.எம்.பிர்தவ்ஸ் அவர்களின் மூலம் அவரை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கேட்டு தாக்கல் செய்யப்பட்ட 33/1415/2019 இலக்கம் கொண்ட வழக்கு மஹரகம தொழில் நியாய சபையில் இடம்பெறுவதோடு, இது வரைக்கும் இத தொடர்பிலான தீர்மானம் ஒன்று கிடைக்கப் பெறவில்லை.

அவ்வாறே திரு. சீ.பீ.பீ. சில்வா சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் ஹோமாகம தொழில் நியாய சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இலக்கம் 33/1562/2021 கொண்ட வழக்கு இதுவரைக்கும் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை.

மேலும், எமது நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்னும் வகையில், 2019 ஆம் வருடம் மேற்கொள்ளப்பட்ட பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ரூபா 446,485 கிடைக்கப்பெறவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பில் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதியில் கிரயம் ரூபா 14,712,522 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும்	உரிய மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக தேவையான	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம்

பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஏற்பட்டிருந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
தனியார் கல்வி நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 67 பாடநெறிகளுக்குரியதாக கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணத்தில் 15 சதவீதமான ரூபா 3,381,714 பெறவேண்டிய தொகையையும், அந்த நிறுவனத்தால் இந்த நிறுவனத்திற்காக நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 19,968,877 தொகையையும் மீளாய்வாண்டிலேனும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த பெறுமதியை கணக்குகளில் உள்ளடக்குவதற்கு தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் கணக்குகள் தயாரிக்கும் சந்தர்ப்பம் வரையிலும் கணக்குகள் பிரிவிற்கு கிடைக்காமையால் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை.	சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கலைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமுதாய முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,290,285 தொகை மற்றும் வானொலி, தொலைக்காட்சி	கலைக்கப்பட்ட அமைச்சிலிருந்து பெறவேண்டிய மீதி தொடர்பாக முன்னாள் இருந்த அமைச்சுக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்ததுடன்	செலுத்த வேண்டிய மீதியை செலுத்துவதற்கும் பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கும் நடவடிக்கை

நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,959,496 தொகை என்பன 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியதாக மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த மீதி தொடர்பாக அமைச்சுடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.	தற்போது நிறுவனத்திற்குரிய வரிசை அமைச்சிற்கும் இது தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது. நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய மூலதன நிதி பொது திறைசேரியிலிருந்து விடுவிக்காமையின் அடிப்படையில் மேலும் செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டுள்ளது.	எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் 6 ஆம் பந்தியின் (ஊ) பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பந்தியின் (பீ) பிரிவு	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்புக் கணக்கில் ரூபா 64,096,718 மீதி முகாமைத்துவ சபை மற்றும் அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று குறுங்கால மற்றும் நீண்டகால சேமிப்பு பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இந்த நிதி முதலீடு செய்யப்படாமல் சில வருட காலமாக பொது சேமிப்பு கணக்கில் பேணிச் செல்லப்பட்டதன் காரணமாக முதலீட்டிலிருந்து பெற வேண்டியதாகவிருந்த உயர்ந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் ரூபா 60 மில்லியன் இலங்கை வங்கி ஹோமாகம கிளையில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.	சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின்	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்குனர்களினால் வைப்புச் செய்யப்பட்ட மீளச்செலுத்த வேண்டிய ரூபா 542,000 ஆன	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இந்த மீதிக்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது . உரிய	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் (3)	வைப்பு மீதியில் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களின் பெறுமதி ரூபா 117,000 ஆகும். இந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வைப்பாளர்களுக்காக மீள்நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	
(இ)	2020 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி	பயிற்சி பாடநெறியை நடாத்தும் பொறுப்பு அரச கரும மொழிகள் விடயப் பொறுப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் தேசிய மொழிக் கல்வி பயிற்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக முகாமைத்துவ தீர்மானத்தின் அடிப்படையில் உத்தியோகபூர்வ மொழி மற்றும் தொழில்கல்வி நிறுவனத்திற்கு பயிற்சி பாடநெறி கையளிக்கும் பொறுப்பு . கையளிக்கப்பட்டிருந்த துடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது அந்த நிறுவனங்களினால் முறையே 07 மற்றும் 09 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன.	அரச நிர்வாக சுற்றறிக்கை 2020/18 ஆம் இலக்கம் மற்றும் 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் 2019/2020 ஆம் ஆண்டுகளில் நிறுவனத்தின் முழுமையான மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தலின் கீழ் பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் கீழ் பதிவு செய்துள்ள உத்தியோகபூர்வ மொழி மற்றும் தொழிற்கல்வி நிறுவனத்தின் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருந்தன.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் II ஆம் பந்தி	சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் நிறுவனத்திற்கு பதவியணியினர்களை சேர்த்தல், சம்பளம் மற்றும் படிகளை தீர்மானித்தல் தவிர்க்கப்பட வேண்டிய போதிலும் அந்த	புதிய அரசின் சௌபாக்கியத்தின் தொலைநோக்கு கொள்கை வெளியீட்டின் பிரகாரம் உத்தேசிக்கப்பட்ட செயல்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தம்புள்ளை நிலையத்தை திறந்து வைப்பதற்கு தேவையாக	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஆலோசனைகளுக்கு இணங்காமல் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது 10 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 2,899,002 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது.	இருந்தமையால் இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. மேலும் இந்த ஆட்சேர்ப்பிற்காக நிறுவனத்தில் உழைக்கப்பட்ட வருமானத்தில் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளது.	
(உ)	2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ 5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	நியதிச்சட்ட நிறுவனங்களின் ஊழியர்களுக்கு படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் ஏனைய நிதிரீதியான நலன்களை செலுத்தும் போது அமைச்சரவை அல்லது அரச நிர்வாக அமைச்சர் அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்ற நலன்கள் மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது உரிய அங்கீகாரமின்றி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 630,000 ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது.	நியதிச்சட்ட நிறுவனமொன்றாக இருந்த போதிலும் இந்த நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்காக மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக எந்தவொரு படியோ அல்லது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஏனைய வரப்பிரசாதங்களோ உரித்தாக இருக்கவில்லை. நிறுவனத்தில் உழைக்கின்ற வருமானத்தை பயன்படுத்தி இந்த ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,849,346 நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 7,946,868 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21,796,214 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் திறைசேரியிலிருந்து கிடைத்த மீண்டெழும் மானியம் ரூபா 9,012,909 இனாலும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வருமானம் ரூபா 6,350,425 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், நிர்வாக செலவினம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்ட செலவினங்கள் முறையே ரூபா 7,292,031 இனாலும், ரூபா 29,780,921 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
வேலை நீக்கத்திற்கு உட்பட்ட பணிப்பாளர் நாயகம் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்படாமல் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் வேலைநீக்கத்திற்கு உட்பட்ட காலத்திற்குரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 666,026 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2020.01.31 ஆந் திகதிய அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் வியப் பொறுப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் கடிதத்தை கவனத்தில் கொண்டு மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு உரிய சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. 2021.07.15 ஆந் திகதி முகாமைத்துவ சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.	வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதை துரிதப்படுத்தல் வேண்டும்.

3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அலுவலகத்தை இயலுமானவரை அரசாங்க கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லவேண்டியிருந்தமை அறிவுறுத்தப்பட்டிருந்த போதும், முகாமைத்துவ சபையினாலும் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு மாத்திரம் இடவசதிகள் உள்ள கட்டிடமொன்றை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்த போதும் தற்போது நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் உடன்படிக்கை காலம் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் இரண்டு வருட காலத்திற்காக நீடிக்கப்பட்டு அலுவலக கட்டிடத்திற்காக ரூபா 16,200,000 வாடகைப் பணம்	இந்தக் கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்காக 2022.12.31 வரை அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. நிறுவனத்தை தாபிப்பதற்கான பொருத்தமான அரசாங்கத்தின் கட்டிடமொன்றை கண்டறிய முடியாதிருந்தமையால் தொடர்ந்தும் இந்தக் கட்டிடத்தில் நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்றது. நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற மொழி பயிற்சி பாடநெறிகளுக்காக இந்தக் கட்டிடம் பயன்படுத்தப்படுவதுடன் நிறுவனத்தின் பொதுவான பயிற்சி பாடநெறிகளை	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	செலுத்தப்பட்டிருந்தது. 32 உத்தியோகத்தர்களையுடைய சிறிய பதவியணியினருக்காகவும் மற்றும் பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு விரிவுரை மண்டபத்தை அமைப்பதற்காகவும் ரூபா 4,140,643 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பயிற்சி பாடநெறிப் பணம் செலுத்தி ஏனைய இடங்களில் நடாத்தியதன் காரணமாக கட்டிடம் உச்ச இயலளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நடாத்துவதற்காக ஏனைய இடமொன்றிற்காக இந்த ஆண்டில் பணம் செலுத்தப்படவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்காக 100 மணித்தியால மொழிப் பாடநெறிகள் 04, பிரிவெனாவில் கல்வி கற்கின்ற 200 பௌத்த பிக்குமார்களுக்காக 05 நிகழ்ச்சித் திட்டங்கள், தமிழ் மொழி பாடநெறிகளுக்காக 04 பாடப் பரிந்துரைகள் தயாரித்தல், சிங்கள டிப்ளோமா மொடியூல் தயாரித்தல் மற்றும் இரண்டாம் மொழி கற்பித்தல் சான்றிதழுக்காக பாட பரிந்துரையினை நவீன மயப்படுத்துதல் போன்ற 05 பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,569,000 கிரயத்தை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் எதுவும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2021 ஆம் ஆண்டின் போது கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஒரேயொரு இடத்தில் பாடநெறி நடாத்துதல் கஷ்டமாக இருந்தமையால் பயிற்சி பாடநெறி ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே வளப் பங்களிப்பாளர்களை வரவழைப்பதில் வசதியீனமாக இருந்தமையால் தமிழ் மொழி விடய பரிந்துரைகளை தயாரிப்பதற்கும், சிங்கள டிப்ளோமா மொடியூல் தயாரிப்பதற்கும், தமிழ் மொழி பாட பரிந்துரைகளை நவீனமயப்படுத்துவதற்கும் தாமதம் ஏற்பட்டிருந்தது.	திட்டமிடப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.